# 10-10-2024 செய்தி

## இலவச அரிசி திட்டம்: 4 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு

- ஏழை மக்களுக்கு உணவு பாதுகாப்பு சட்டம் மற்றும் பிற நலத் திட்டங்களின் கீழ்வரும் 2028-ஆம் ஆண்டு வரை இலவச செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தைத் தொடர மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- ஏழை மக்களிடையே ரத்தசோகை மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை குறைக்கும் நோக்கில்
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் வழிகாட்டு நடைமுறையின் அடிப்படையில் இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம், வைட்டமின் பி 12 ஆகிய நுண்ணூட்டச் சத்துக்கள் அரிசியில் செறிவூட்டப்பட்ட ஏழை மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.
- பிரதமரின் இலவச உணவு தானிய விநியோகத் திட்டம் உள்ளிட்ட அனைத்து நலத் திட்டங்களின் கீழ் ஏழை மக்களுக்கு விநியோகிக்கப்படும் செறிவூட்டப்பட்ட இலவச அரிசி விநியோகத்தை 2024-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2028-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

**லோத்தலில் தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகம்**

- குஜராத் மாநிலம் லோத்தலில் தேசிய கடல் சார் பாரம்பரிய வளாகத்தை (என்எம்ஹெச்சி) அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## மூவருக்கு வேதியியலுக்கான நோபல் பரிசு

- வேதியியலுக்கான நோபல் பரிசு டேவிட் பக்கெர், டெமிஸ் ஹல்ஸாபிஸ், ஜான் ஜம்பெர் ஆகிய மூவருக்கு பகிர்ந்தளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- புரதம் வடிவமைப்பு மற்றும் கட்டமைப்பு தொடர்பான ஆராய்ச்சிக்காக இவர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.
- டேவிட் பக்கெர் 2003-ஆம் ஆண்டு புதிய புரதத்தை வடிவமைத்தார். அதன் பிறகு, அவருடைய ஆராய்ச்சிக் குழு மருந்துகள், தடுப்பூசிகள், நானோ பொருள்கள் மற்றும் சென்சார்களாக பயன்படுத்தக்கூடிய கற்பனைத் திறன்கொண்ட புரதங்களை வடிவமைத்தது.
- ஆராய்ச்சியாளர்கள் ஹஸ்ஸாபிஸ் மற்றும் ஜான் ஜம்பெர் ஆகியோர், பல்வேறு ஆராய்ச்சியாளர்களால் இதுவரை அடையாளம் காணப்பட்ட 20 கோடி புரதங்களின் கட்டமைப்பை கணிக்கும் வகையிலான செயற்கை நுண்ணறிவு மாதிரியை உருவாக்கினர்.
- இந்த ஆராய்ச்சிகளுக்காக இவர்களுக்கு வேதியியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்வுக் குழு தெரிவித்துள்ளது.

## விடுதலைப் போராட்ட வீரர்கள் 3 பேருக்கு சிலைகள்

- விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவனின் முக்கியத் தளபதியாகத் திகழ்ந்து அவரது மடியில் உயிர்நீத்த மாவீரன் வெண்ணிகாலாடியின் தியாக வீரத்தைப் போற்றும் வகையில் தென்காசி மாவட்டம் நெல்கட்டும் செவல் கிராமம் பச்சேரியில் சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- இதேபோன்று, சிவகங்கையை மீட்டிடப் படை திரட்டி வீரமங்கை வேலுநாச்சியாரின் மெய்க்காப்பாளராக விளங்கிய குயிலி, எரியெண்ணெயைத் தடவிக் கொண்டு வெள்ளையரின் ஆயுதக்கிடங்கில் குதித்து அழித்துத் தியாகச் சுடராகி ஒளிந்தார்.
- அவரது நினைவைப் போற்றும் வகையில், சிவகங்கை மாவட்டம் ராகினிப் பட்டியலில் அமைந்துள்ள வேலுநாச்சியார் மணிமண்டப வளாகத்தில் குயிலித் தாய்க்கு சிலை நிறுவப்பட்டது.
- இதேபோன்று, வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கிலிட்டோருக்கு பாடம் புகட்டுவேன் என வீர முழக்கமிட்டார். தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர்; அதன்படியே செய்தும் காட்டினார்.
- அவரது வீரத்தைப் போற்றும் வகையில் திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் எத்தலப்பர் நாயக்கருக்கு சிலையும், நினைவு அரங்கமும் அமைக்கப்பட்டுள்ளது.